**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4615/ஆ5/2024, நாள்.12/12/2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – திருக்குறளை இயற்றிய அய்யன் திருவள்ளுவருக்கு தமிழ்நாடு அரசு குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவியது – வெள்ளிவிழா ஆண்டு – 01 ஜனவரி 2025 முன்னிட்டு – பள்ளி மாணவர்களுக்கான இணையவழி மூலம் மாவட்ட அளவிலான திருக்குறள் முற்றோதல் போட்டிகள் நடத்துதல் – சார்பு

பார்வை
1. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை, அரசுக் கடித எண். 8882588/தவ–2–2/2024–2, நாள். 29.11.2024
2. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, அரசுக் கடித எண். 8677226/தவ–2–2/2024,–3, நாள். 04.11.2024
3. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.19528/எம்1/இ1/2024, நாள்.14.11.2024
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 18.11.2024 மற்றும் 04.12.2024

.....

மேற்காணும் பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருவச்சிலை நிறுவப்பட்டு இந்நிகழ்வின் 25 ஆண்டுகள் நிறைவு பெறவுள்ள நிலையில் ஜனவரி மாதம் 1ம் தேதி 2025 அன்று சிறப்பு கொண்டாடத்தின் ஒரு பகுதியாக பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக பள்ளிகளில் திருக்குறள் முற்றோதல் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என பார்வை 5–ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பள்ளி அளவில் திருக்குறள் முற்றோதல் போட்டிகள் நடத்தப்பட்டு முதலிடம் பெறும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் இணையவழி மூலம் நடத்தப்பட்டு முதல் மற்றும் இரண்டாம் இடங்களில் வெற்றி பெறும் மாணவர்களை மாநில அளவில் இணையவழி மூலம் நடைபெறும் போட்டியில் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4–ல் காணும் 04.12.2024 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் 06.12.2024 அன்று பள்ளி அளவில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடத்த தெரிவிக்கப்பட்டது. பள்ளி அளவில் முதலிடம் பெற்ற மாணவர்கள் 14.12.2024 (சனிக்கிழமை) அன்று காலை 11.00 மணி அளவில் இணையவழி மூலம் நடைபெறும் மாவட்ட அளவிலான திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் மாணவர்கள் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணையவழி Link விவரம் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் தனியார் பள்ளிகளின் Whats App குழுவில் பகிரப்படும். இணையவழி Link–னை திருக்குறள் போட்டியில் பங்குபெறும் மாணவர்களுக்கு தெரிவிக்குமாறும் மேலும் மாவட்ட அளவில் பங்கு பெறும் மாணவர்கள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Online Google Sheet–ல் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – Online Google sheet

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
அனைத்து வகை பள்ளிகள், .
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை/ தனியார்/ தொடக்கக்கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   வேலூர் மாவட்டம்,
   (மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக
4. பள்ளித் துணை ஆய்வாளர்கள்,
   (முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம்)
   வேலூர் மாவட்டம். (சார்ந்த அலுவலர் மூலமாக)
   (மாவட்ட அளவிலான திருக்குறள் முற்றோதல் போட்டியினை
   இணையவழி மூலம் நடத்திட தெரிவிக்கப்படுகிறது.)